

kesb

Kindes- und
Erwachsenenschutzbehörden
**Kanton St.Gallen**

## KESB குறுகிய விளக்கம்

குழந்தை மற்றும் வயதுவந்தவர்களுக்கான பாதுகாப்பு ஆணையம் (KESB) மனிதவாழ்வில் ஏற்படும் கடினமான சூழ்நிலையின் போது உதவுகின்றது. அறிவித்தல் (Meldung) கிடைக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே ஆணையம் செயற்படும். சிலநேரங்களில் சம்மந்தப்பட்டவர்கள் நேரடியாக KESB உடன் தொடர்புகொள்வார்கள். சிலசமயத்தில் தங்கள் கவலையை தெரிவிப்பவர்கள் உறவினர்கள், அயல்வீட்டார், பாடசாலை மற்றும் காவல்துறையாகவும் இருக்கும்.இப்படிப்பட்ட அறிவித்தல் கிடைக்கப்பெற்றதும் KESB தொழில்சார் நிபுணர்கள் ஒரு குழந்தைக்கு உதவி அல்லது வயதுவந்தவருக்கு ஆதரவு தேவையா என்பதை ஆராய்ந்துகொள்வார்கள்.

KESB செயற்பட தொடங்கும் போது வழக்கு (Verfahren) ஒன்றை ஆரம்பிக்கின்றது. இந்த வழக்கு ஆணைய உறுப்பினர்களால் வழிநடத்தப்படுகின்றது. ஒரு வழக்கு சம்பந்தமான தெளிவுபடுத்தலை தொழில்சார் நிபுணர் ஒருவர் பொறுப்பேற்று நடத்துவார். சட்டவல்லுனர்கள், உளவியல்நிபுணர்கள் மற்றும் சமூகசேவகர்களே தொழில்சார் நிபுணராக கடமையாற்ற முடியும். இவர்கள் சம்மந்தப்பட்டவர்களை, பெற்றோரையும் பிள்ளையையும் கலந்துரையாடலுக்கு அழைப்பார்கள். சம்மந்தப்பட்டவர்கள் தங்கள் சூழ்நிலையை எப்படி மதிப்பிடுகின்றார்கள் என்பதே KESB அறிய விரும்பும் விடயமாகும். இக்கலந்துரையாடலின் பின்னர் அவசியம் என்றால் மாத்திரமே மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும். தொழில்சார் நிபுணர் உதாரணமாக வைத்தியரிடம், பாடசாலையில் தகவலை கோரலாம். குழந்தைகள் பாதுகாப்பின் பிரகாரம் மூன்றாவது ஒரு அரசு சார்பு மையத்திடம் குடும்ப நிலமையை ஆராயும்படி பணிக்காலம். நடத்தப்படும் வழக்கானது பொதுவாக பணம் செலுத்தப்படவேண்டியது.

விசாரணைகளின் முடிவில் KESB பணியாளர்கள் சாத்தியமான உதவி மற்றும் ஆதரவுத்திட்டத்தினை பரிந்துரைப்பார்கள், அது விவேகமானதாகவும் அவசியமாகவும் இருப்பின். சம்பந்தப்பட்டவர்கள் இதுகுறித்து தங்கள் கருத்தை தெரிவிக்க முடியும். இதன்பின்னர் மூன்று ஆணையஉறுப்பினர்கள் சுயாதீனமாகவும், சட்டத்தின் அடிப்படையிலும் மேலதிக செயட்பாடுகள் குறித்து முடிவெடுப்பார்கள். அதற்கு சட்டம், சமூகப்பணி மற்றும் கற்பித்தல்கலை போன்றவற்றில் அவர்கள் பெற்ற நிபுணத்துவத்தை பயன்படுத்திக்கொள்வார்கள். அவர்களினால் எடுக்கப்படும் முடிவே தீர்ப்பு (Entscheid) என்றழைக்கப்படும்.

இந்த முடிவில் KESB செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஆணையிடும், அவை அவசியமாகவும் உகந்ததாகவும் இருபின். உதாரணமாக ஒருவரை (Beistand) நியமித்து அவரே உதவிதேவைப்படும் நபரின் விடயங்களை கவனித்துக்கொள்வார். இப்படி நியமனம் பெறுபவர்கள் தொழில் ரீதியாக ஓர் அமைப்பில் பணியாற்றுபவராக இருக்கலாம். வயதுவந்தவர்களுக்கு பெரும்பாலும் சம்பந்தப்பட்டவரின் சுற்றாடலைச் சேர்ந்த தனிநபராகவும் இருக்கலாம்.

பெற்றோர்கள், குழந்தை அல்லது நெருக்கமானவர் இந்த முடிவில் சம்மதம் இல்லை என்றால் அதற்கு எதிராக முறைப்பாடு (Beschwerde) செய்ய முடியும். முறைப்பாடு வழங்கிய பின்னர் முடிவை நீதிமன்றம் இன்னுமொருமுறை பரிசீலனை செய்யும்.